**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்**

**முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ) ஓமலூர்,

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 528/2025**

CNR.No: TNSA100039642025

**வழக்கின் சுருக்கம்**

| **வ. எண்** | **விவரம்** | **உள்ளடக்கம்** |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், தொளசம்பட்டி காவல் நிலையம் குற்ற எண். 123/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 324 |
| 2. | எதிரிகளின் விபரம் | A1)திரு.ஆண்டி (75/2026),(கூலி),<br>த/பெ.பழனி,<br>பேக்காடு,<br>தொளசம்பட்டி,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.<br><br>A2)திரு.குமார் (60/2026), (கூலி),<br>த/பெ.ஆண்டி,<br>பேக்காடு,<br>தொளசம்பட்டி,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.<br><br>A3)திருமதி.பூங்கொடி (38/2026), (கூலி),<br>க/பெ.ஆண்டி,<br>பேக்காடு,<br>தொளசம்பட்டி,<br>ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். |
| 3. | குற்றச்சம்பவம் நிகழ்ந்த நாள் | 28.06.2022 |
| 4. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 08.09.2022 |



SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:33:55 +0530

| | | |
|---|---|---|
| 5. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தேதி | 29.09.2025 |
| 6. | எதிரிகளை கைது செய்யப்பட்ட நாள் | A1, A2, A3 – எதிரிகளை கைது செய்யவில்லை. |
| 7. | பிணையில் வெளிவந்த நாள் | A1, A2, A3 – 02.09.2022 ம் தேதி முன்பிணையில் வெளிவந்துள்ளார்கள். |
| 8. | விசாரணையின் தொடக்கம் | 02.12.2025 |
| 9. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் விபரங்கள் | A1) ஆண்டி – இ.த.ச பிரிவுகள் 294(b), 324<br>A2) குமார் மற்றும் A3) பூங்கொடி – இ.த.ச பிரிவு 323 |
| 10. | விசாரணை முடிவு | 07.07.2026 |
| 11. | தீர்ப்பு விவரம் | எதிரி A1) ஆண்டி என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324 –ன் கீழும், எதிரிகள் A2) குமார் மற்றும் A3) பூங்கொடி என்பவர்கள் மீது இ.த.ச பிரிவுகள் 323 –ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023 பிரிவு 271(1)–ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம் (Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023–ன் பிரிவு 481–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரிகள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும். |
| 12. | வழக்கின் சொத்துகள் | இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:33:59 +0530

| | | |
|---|---|---|
| | | தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023–ன் பிரிவு 498–ன் படி கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. |
| 13. | தீர்ப்பு அல்லது கண்டுபிடிப்பின் நகலை குற்றம் சாட்டப்பட்டவருக்கு வழங்குதல் | இல்லை, தீர்ப்பு உடனடியாக இ–கோர்ட் (e–courts) இணையதளத்தில் பதிவேற்றப்படுகிறது |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | காலதாமதம் இல்லை |

இவ்வழக்கானது, கடந்த 29.09.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் திரு.S.சுரேஷ் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.எழிலரசு அவர்களும் முன்னிலையாகி, முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், அரசு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## தீர்ப்புரை

**வழக்கின் சுருக்கம்:**

1) சேலம் மாவட்டம், தொளசம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில், தொளசம்பட்டி, பேக்காட்டை சேர்ந்த சாட்சி–1 வாதி மதியழகன் என்பவருக்கும் அவரது அண்ணன் ஆண்டிக்கும் தடவழி நிலபிரச்சனை சமந்தமாக முன்விரோதம் இருந்த நிலையில் 28.06.2022ம் தேதி சுமார் இரவு 7.00 மணியளவில் சாட்சி–1 மதியழகன் வீட்டில் இருந்தபோது 1வது எதிரி ஆண்டி குடிபோதையில்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:03 +0530

வீட்டின் முன்பு வந்து "தேவடியா பையா" என்று திட்டியும், 2வது எதிரி குமார் என்பவர் ஓடி வந்து காலால் எட்டி உதைத்தும், 3வது எதிரி பூங்கொடி என்பவர் கையாலும், காலாலும் உதைத்தும், 1வது எதிரி ஆண்டி எட்டி உதைத்தும், கீழே தள்ளியும், தறி நாடாவை எடுத்து வலது கண் புருவத்தின் மீதும் நடு நெஞ்சு பகுதியிலும், முதுகிலும் மாறி மாறி குத்தி காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே 1–வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324 ன் கீழும், 2–வது எதிரி மற்றும் 3–வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 323 ன் கீழ் தொளசம்பட்டி காவல் உதவி ஆய்வாளரால் இறுதியறிக்கை தாக்கல் செய்து, அவ்வாறே வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**<u>நீதிமன்றம் பின்பற்றிய வலியுறுத்து சட்ட வகையங்கள்:</u>**

2) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023, பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்கிற்கான ஆரம்ப முகாந்திரம் இருந்த காரணத்தினால்,

| எதிரிகள் | பிரிவுகள் |
|---|---|
| A1) ஆண்டி | இ.த.ச பிரிவுகள் 294(b), 324 |
| A2) குமார் மற்றும் A3) பூங்கொடி | இ.த.ச பிரிவு 323 |

3) எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வரைந்து, எதிரிகளிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என மறுத்துரைத்துள்ளார்கள். எனவே, வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய வழிவகை செய்யப்பட்டது.

**<u>எதிரிகள் மீதான வழக்கினை மெய்ப்பிக்கும் பொருட்டு:</u>**

4) அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:06 +0530

செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:</u>

5) **அ.சா.1 திரு. மதியழகன் (புகார்தாரர்) ஆவார்:** தான் தொளசம்பட்டி பேக்காட்டில் குடியிருந்து நெசவு தொழில் செய்து வருவதாகவும், எதிரிகளுக்கும் தங்களுக்கிடையே தடவழிப்பிரச்சினை இருந்த வந்ததாகவும், 28.06.2022ம் தேதி இரவு 07.00 மணியளவில் தன் வீட்டருகே இருந்தபோது எதிரி ஆண்டி அங்கு வந்து தடவழிப்பிரச்னை சம்மந்தமாக பேசியபோது தங்களுக்குகிடைய வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடினார்கள் என்றும், கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் கீழே விழுந்து வலது கண்புருவம் அருகே காயம் ஏற்பட்டது என்றும், தான் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், தொளசம்பட்டி போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றும், எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது என்று சாட்சியம் அளித்து அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அ.சா.2 திருமதி. அமுதா (புலன்விசாரணை அதிகாரி):** தான் தற்போது தொளசம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 03.06.2022ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த ஈஸ்வரன் என்பவரது கையெழுத்து ஆவணங்களின் அடிப்படையில் தனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அந்த புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்தும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்தும், பார்வை மகஜர் அ.சா.5 ஆக குறியீடு செய்தும்,

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:10 +0530

மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்தும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்தும், சேலம் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்தும், பின்பு எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023, பிரிவு 351(1)(b)–ன் கீழான நடவடிக்கைகள்:</u>**

7) அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து, எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளைத் தனியே தொகுத்து, அதைப் பற்றி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 351(1)(b) பிரிவின் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவ, எதிரிகள் அவற்றை பொய்ச்சாட்சிகள் என மறுத்தும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை எனவும் பதில் அளித்துள்ளனர்.

**<u>தீர்வு காண வேண்டிய விவாத வினாக்கள்:</u>**

8) தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கானது, தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால், சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

9) அரசு தரப்பு வழக்கதானது, எதிரிகள் வாதியை அசிங்கமாகப் பேசி, அடித்து காயத்தை ஏற்படுத்தியுள்ளர்கள் என்பதேயாகும்.

10) ஆனால், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 திரு.மதியழகன் தனது முதன்மை விசாரணையில், *"தங்கள் இருதரப்பினருக்கும் வாய்த்தகராறு தான் என்றும், சத்தம் கேட்டு பொதுமக்கள் கூட்டமாக கூடிவிட்டார்கள் என்றும், கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தான் கீழே விழுந்து வலது கண்புருவம் அருகே காயம் ஏற்பட்டது என்றும், தான் சிகிச்சைக்காக சேலம் அரசு*



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:14 +0530

*மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றும், அப்போது அங்கு வந்த போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான்"* என்று சாட்சியம் அளித்து **அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் (Hostile Witness)** அளித்துள்ளார். குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பிற்கு ஆதரவாகச் சாட்சியம் அளிக்கவில்லை.

11) மேலும் புகார்தாரரான அ.சா.1 மதியழகன் என்பவரின் சாட்சியம் இவ்வாறாக உள்ள நிலையில், புலன் விசாரணை தொடர்பாக அளிக்கப்பட்ட அ.சா.2 அமுதா என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரிகள் மீதான வழக்கினைத் தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மேற்கண்ட சூழ்நிலைகளும், அ.சா.1 மதியழகன் என்பவரின் சாட்சியமும், எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுகிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்குச் சாதகமாக்கி, அவர்களை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து, மேற்கண்ட பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

**<u>முடிவு:</u>**

13) எதிரி A1) ஆண்டி என்பவர் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324 –ன் கீழும், எதிரிகள் A2) குமார் மற்றும் A3) பூங்கொடி என்பவர்கள் மீது இ.த.ச பிரிவுகள் 323 –ன் கீழ் குற்றச்சாட்டுகளிலிருந்து, எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023 பிரிவு 271(1)–ன் கீழ் **விடுதலை செய்து** தீர்ப்பளிக்கப்படுகிறது.

14) குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் முன்பு வழங்கியிருந்த பிணைப்பத்திரம் (Bond) ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்காக, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023–ன் பிரிவு 481–ன் கீழ் புதிய பிணைப்பத்திரத்தை எதிரிகள் நிறைவேற்ற வேண்டும். அந்தப்



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:17 +0530

பிணைப்பத்திரம் 6 மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

15) இவ்வழக்கில் இரு தரப்பினராலும் எந்தப் பொருளும் (Property/Material Object) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023–ன் பிரிவு 498–ன் படி கீழ் சொத்து அல்லது பொருள் தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை

இத்தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் வைத்து, அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–**

| **வரிசை எண்.** | **சாட்சிகள்** | **சாட்சிகளின் பெயர்கள்** | **விசாரணை செய்த நாள்** |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.ப.மதியழகன் | 07.07.2026 |
| 2. | அ.சா.2 | திருமதி.ர.அமுதா | 07.07.2026 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| **வரிசை எண்.** | **குறியீடு** | **குறியீடு செய்யப்பட்ட தேதி** | **அரசு தரப்பு சான்றாவணங்கள்** | **குறியீடு செய்யப்பட்ட சாட்சி** |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 30.06.2022 | அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 07.07.2026 | அந்த சமாதான மனுவில் உள்ள கையெழுத்து அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | 30.06.2022 | புகார் வாக்குமூலம் | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | 30.06.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | 30.06.2022 | பார்வை மகஜர் | அ.சா.2 |
| 6. | அ.சா.ஆ.6 | 30.06.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| 7. | அ.சா.ஆ.7 | 30.06.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | |
| 8. | அ.சா.ஆ.8 | 28.06.2022 | மதியழகன் என்பவருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று சேலம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது | அ.சா.2 |



SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:24 +0530

எதிரிகள் தரப்பு சாட்சிகள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:– இல்லை
எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

**குறிப்பு**

தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்.

இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,(மு.கூ.பொ),
ஓமலூர்.

**வழக்கு சுருக்கம்**

<table>
<tr><td>1.</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">29.09.2025</td></tr>
<tr><td>3.</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு (Sessions Court) ஒப்படைக்கப்பட்ட தேதி</td><td colspan="3">பொருந்தாது</td></tr>
<tr><td>4.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">07.07.2026</td></tr>
<tr><td rowspan="6">5.</td><td rowspan="6">தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>CMP. No.</td><td>Petition</td><td>Result</td></tr>
<tr><td>1834/2026</td><td>Surrender Petition</td><td>Allowed</td></tr>
<tr><td>1835/2026</td><td>Warrant Recall Petition</td><td>Allowed</td></tr>
<tr><td>1836/2026</td><td>Advance Hearing Petition</td><td>Allowed</td></tr>
<tr><td>2470/2026</td><td>Petition u/s.359 of BNSS</td><td>Dismissed</td></tr>
<tr><td>2471/2026</td><td>Petition u/s.348 of BNSS</td><td>Allowed</td></tr>
<tr><td rowspan="3">6.</td><td rowspan="3">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>P.W.1</td><td>07.07.2026</td><td>Hostile</td></tr>
<tr><td>P.W.2</td><td>07.07.2026</td><td>07.07.2026</td></tr>
<tr><td>7.</td><td>பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் 2023 பிரிவு 351(1)(b)–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">07.07.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">A1, A2, A3 - 04.06.2026 to 09.06.2026</td></tr>
<tr><td>9.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.16 17:34:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்(மு.கூ.பொ),
ஓமலூர்